IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பெத்தவனின் சமூக உளவியல்

# SOCIAL PSYCHOLOGY IN PETHAVAN

திருமதி டே.மகேஸ்வரி,

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)

தமிழியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிதம்பரம்.

அண்ணாமலை நகர்.

**D.Maheswari,**

**Doctor of philosophy scholar (Part-time)**

**Tamil studies and research**

**Annamalai University**

**Annamalai Nagar.**

**Abstract**

**Pethavan is a short novel written by writer Imayam. This novel describes the problem caused by the love between a man and a woman from two different castes (Periyasamy - Pakhyam) based on social psychology.The purpose of this dissertation is to highlight the psychology of the individual (Palani) and the social psychology of his ultimate status due to the caste trend of the society.**

**Keywords: Novel, Pethavan, social psychology, social control, Caste violence**

**முன்னுரை**

மனிதர்கள் இன்பம் ,துன்பம், அன்பு ,இரக்கம், இரக்கமற்ற தன்மை, வறுமை, காதல், தனிமை,பசி, சாதி போன்ற பல கூறுகள் கலந்த சமூகத்தில் வாழும் தன்மை உடையவர்கள். நாவல்கள் இவை எல்லாம் கலந்த வாழ்வில் சித்தரிப்பை மிகவும் துல்லியமாக, அனுபவபூர்வமாக வெளிப்படுத்தும் ஒரு இலக்கிய வடிவமாகும். அவ்வகையில் எழுத்தாளர் இமையம் அவர்களின் 'பெத்தவன்' நாவல் கலப்பு மணத்திற்கான சமூக எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பட்டதாகும். கீழ் சாதியினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இந்த சமூகம் அவர்களை நடத்தும் முறையை இக்குறுநாவல் எடுத்துரைக்கின்றது . இக்கட்டுரை பெத்தவன் நாவலின் சமூக உளவியலை விவரிக்கிறது.

**சமூக உளவியல்**

சமூக உளவியல் என்பது சமூகவியலும் உளவியலும் சேர்ந்த ஓர் உளவியல் பிரிவாகும். சமூக உளவியல் பற்றிய கருத்தாக்கங்களை கோர்டன் ஆல்பர்ட், கிம்போல் யங், எப்.எச்.ஆல்போர்ட் , வரோன் .. முதலியோர் கூறியுள்ளனர்." சமூக உளவியலானது சமூகத்தைப் பற்றிக் கற்கின்ற, சமூகப் பிரச்சினைகளை ஆராய்கின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது"1 . இந்நாவலில் அச்சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிக் காண்போம்.

**சாதியப் போக்கு**

'பெத்தவன்' எனும் தலைப்பு பாக்கியம் எனும் பெண் குழந்தையை பெற்றவனின் நிலையை பெரிதாக வெளிப்படுத்துவதால் அமைந்த ஒன்றாக உள்ளது. இந்நாவல் வெளிப்படுத்தும் கதைக்கரு இரு வேறு சாதியினரான பாக்கியம் பெரியசாமி எனும் இருவரின் காதலை மிகப்பெரிய குற்றமாக் கருதி, அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையை மையமாகக் கொண்டதாகும். பெரியசாமி போலீஸ் அதிகாரியாக இருக்கிறான். இவர்கள் விருத்தாச்சலம் கல்லூரியில் படிக்கும் பொழுது காதல் வயப்படுகின்றனர். இது சாதிக்கு மிகப் பெரிய அவமானமாக கருதப்படுகிறது.

இவ்வாறாக கதையின் தொடக்கமே பாக்கியத்தை கொன்றுவிட வேண்டும் என்று பாக்கியத்தின் தந்தையிடம் உயர்சாதியினர் தீர்க்கமாக வலியுறுத்துவதாக

தொடங்குகிறது. அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் பின்வருமாறு வெளிப்படுகிறது.

- ஒரு பொட்டச்சி ஊரையே தலைகுனிய வைத்திருக்கிறாள்.
- நான் பொறந்த குறவன் குப்பம் இருந்திருந்தா சேதி தெரிஞ்ச ராத்திரிக்கி அவ கதெய முடிச்சிருப்பாங்க-ஒரு பெண்
- நாங்க எங்களுக்காக சொல்லல நம்ப சாதிமானம் போவக்கூடாது. எல்லாத்துக்கும் மேல கட்சியோட மானம் போவக் கூடாதுன்னு தான் சொல்றம். இது மத்த ஊரு பொட்டச்சிவளுக்கும் தெரியணும். அப்பத்தான் ஒயிங்கு மரியாதியா இருப்பாளுவோ. ஒன்னோட இரண்டாவது மகள் இருக்கிறாளே நொண்டிக் குட்டி,அவளையாச்சும் பத்தரமா வச்சிக்க. இல்லன்னா அக்காளுக்கு மேல தான் போயிருப்பா.
- எங்களுக்காவா செய்யும்? ஆயிரம் தலக்கட்டுக்காரணும் வேட்டி கட்டிக்கிட்டு போவணுமில்ல அதுக்காக தான்.

இதற்கு முன்னர் பாக்கியமும் பெரியசாமியும் சந்தித்த இடங்களை யாராவது பார்த்துவிட்டு சொல்லும் போதெல்லாம் அவர்கள் இருவருக்கும் பலவிதமான இன்னல்களை செய்கின்றனர் மேல்சாதியினர். அச்சமூக மக்கள் பெரியசாமி மீது ஆவேசம் கொள்கின்றனர். "சமூக உளவியலாளர்கள் ஆவேசத்தினைக் குறிப்பதற்கு வன்முறை(Violence) எனும் எண்ணக்கருவினையும் பயன்படுத்துகின்றனர். இவ்வன்முறை என்பது தீவிரமான உடலியல் தீங்காகும். இங்கு காயம் ஏற்படுத்துதல் மற்றும் மரணம் ஏற்படுத்துதலே பிரதான இலக்காகும். வன்முறையானது ஆவேசத்தின் உப பகுதியாகும். அனைத்து வன்முறை செயற்பாடுகளுமே ஆவேசத்தின்பாற்பட்டதே ஆகும். ஆனால் தீவிரமான உடலியல் தீங்கினை ஏற்படுத்தும் நோக்குடன் கூடிய கொலை கற்பழிப்பு கொள்ளை துஷ்பிரயோகம் என்பவை வன்முறையே ஆகும்."2 . இந்நாவலில் பெரியசாமி மற்றும் பாக்கியம் இருவருக்கும் பல தீவிரமான உடலியல் தீங்கு மற்றும் பொருளாதார அழிப்பு போன்றவற்றினை செய்கின்றனர்.

**பாக்கியத்திற்கு வழங்கும் தண்டனைகள்**

- ❖ சாணியை கரைத்து வாயில் ஊற்றுதல்
- ❖ தலைமயிரை அறுத்தல்
- ❖ உடம்பு அதற்காகத்தான் அலைகிறாய் என்று இருபது முப்பது உயர்சாதி ஆண்கள் வேட்டியை அவிழ்த்து காட்டுதல்
- ❖ பாக்கியத்தில் வீட்டில் அடித்து துன்புறுத்துதல்

என்ற பல இன்னல்களைச் செய்தாலும் பாக்கியம் அவளின் மனநிலையிலிருந்து மாறுவதாக இல்லை. அழுவதும் இல்லை மனவுறுதியுடன் காணப்படுகிறாள்.

**அந்நேரங்களில் பெரியசாமிக்கு கொடுத்த இன்னல்களாவன.**

- ❖ நான்கு முறை விருத்தாசலம் பேருந்து நிலையத்தில் வைத்து அடித்தது
- ❖ பெரியசாமியின் வீட்டில் இரண்டு முறை நெருப்பு வைத்தல்
- ❖ இரவில் ஆடு மாடுகளை அவிழ்த்து விடுதல்
- ❖ பெரியசாமி வீட்டு ஆடுகளை வெட்டுதல்
- ❖ கரும்புத் தோட்டத்தில் நெருப்பு வைத்தல்
- ❖ சாதி பஞ்சாயத்து வைத்து ஐந்து முறை அபராதம் கட்டியது
- ❖ பெரியசாமியின் அம்மா அப்பாவை கட்டிவைத்து அடித்தல்

இவ்வாறு "தீண்டத்தகாதவராக கருதப்படுபவர்கள் பல்வேறு பொருளாதார ,அரசியல், சமூகத்தடங்களையும், தடைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது **சமூக் களங்கம்** என்ற பெயரால் ஒடுக்கப்பட்டவர்கள் சமூகத்தில் விளிம்பு நிலையிலேயே இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது"3.இந்நிலைக்கு அச்சமூகத்தின் சாதியக் கட்டமைப்பு காரணமாகிறது.ஆராய்ந்து பார்க்கின் இத்தகைய வன்முறைகள் சமுதாயத்திற்கு எவ்வித நன்மையும் செய்யப் போவது இல்லை.சமூகத்தின் உளவியல் போக்கு மாறவேண்டும். இத்தகு மாற்றங்களையே சமூக உளவியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

இந்நாவலில் சாதியம் சார்ந்த பதிவுகள் மேலும் பல இடங்களில் காணப்படுகிறது.

- இது வீம்புக்கு சூரிக்கத்திய முழுங்குற சாதி, கட்டுறதுக்கு கோமணம் இல்லன்னாலும் சாதியை வுட மாட்டானுவ. அப்படியே வந்தாலும் ஒன்னால வாழ்க்க செய்ய முடியாது-பழனி
- பழிபாவத்துக்கு வெட்டுக்குத்துக்கு அஞ்சாத சாதியில் பிறந்தது உனக்கும் தெரியும்-பழனி
- சும்மா இருடி ஊர் பஞ்சாயத்தில் என்னிக்கு முடிவாச்சோ அன்னிய தேதியிலிருந்து நம்ப ஊட்டச்சுத்தி ஆளு நடமாடிக்கிட்டு இருக்கிறது எனக்கு தான் தெரியும்.கீச்சாதிப் பயகூடப் படுக்கத்தான் அலயுறா. அதுக்கு முன்னாடி நம்ம காரியத்தை முடிக்கவேண்டும் என்று சொல்லி ஏழு எட்டு எள் வயசு பயலுவோ சுத்துறானுவ. கட்சிக்காரன் தான் இதுல மின்ன நிக்கிறான். பத்து இருபது பேர் கூடி சாணியை மிதிக்கிற மாதிரி மிதிச்சு துவச்சி எடுத்துப்புடுவானுவ. அப்புறம் நாலு பேரும்தான் சாகணும் -மனைவியிடம் பழனி .

இவ்வாறு , இன்னும் கீழ்த்தரமான வசையாடல்கள் ஆங்காங்கே காணப்படுகிறது.மேலும் ,சுற்று வட்டாரங்களில் சாதி மாறி காதலித்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் அங்காங்கே இந்நாவல் சுட்டிக் செல்கிறது.அதாவது,

- நல்லூரில் நடந்தது4
- பாலூரில் நடந்தது5
- முட்லூரில் நடந்தது6

முதலியனவாகும்.

**பெத்தவனின் உளவியல்**

பழனிக்கும் சாமியம்மாளுக்கும் திருமணம் முடிந்து இருபது வருடங்கள் கழித்து பிறந்தவள் பாக்கியம். கடந்த மூன்று வருடங்களாக இந்த பிரச்சனை காரணமாக, தங்கை செல்வராணி தவிர குடும்பத்தில் யாரும் பாக்கியத்திடம் யாரும் பேசுவதில்லை. ஊரார் அனைவரும் ஒன்று கூடி, பாக்கியத்தை கொன்றுவிடும் படி கட்டளையிட, பழனியும் கொன்றுவிடுவதாக ஊராருக்கு கட்டுப்பட்டு சத்தியம் செய்கிறார். ஆனால் அவரால் அவ்வளவு எளிதாக செய்து விட முடியவில்லை. ஆனால் பாக்கியம் தானாகவே தற்கொலை செய்து கொண்டால் பரவாயில்லை என்று, விசங்கள் மற்றம் கயிறுகளை வீட்டில் வைத்து விட்டு வெளியே சென்று விடுகின்றனர் குடும்பத்தினர்.ஏனெனில் பாக்கியத்தை

கொலை செய்வதற்கு அவள் குடும்பத்தினர் விரும்பவில்லை அச்சமுகம் குடும்பத்திற்கு கொடுக்கும் நெருக்கடியை அவர்களை வருத்துகிறது தனிமனிதனான பழனி தன்மகள் ,தன் குடும்பம் என்ற முடிவை அவனால் எடுக்க முடியவில்லை. பாக்கியமும் தற்கொலை செய்து கொள்ளவில்லை,அழவும் இல்லை மிகவும் வைராக்கியத்துடன் இருப்பவகளாக காணப்படுகிறாள்.

ஊராரிடம் மகளை கொன்று விடுவதாக வாக்களித்துவிட்டு வரும் பழனிக்கு கால்கள் நடுங்குகின்றன.பழனியின் தாய் துளசியும் 'வாழை மரத்தை வெட்டி சாய்த்து விடாதே' என்று சத்தியம் வாங்குகிறாள். பழனிக்கும் மகளை கொல்ல மனமில்லை.பாக்கியத்தை பெரியசாமி உடன் அனுப்பி வைக்க முடிவெடுக்கிறார். வீட்டில் உள்ள அனைத்து நகை பணம் அனைத்தையும் ஒன்றாகக் கட்டிக் கொடுத்து, நீ உயிரோடு இருக்க வேண்டும் போய்விடு என்று பழனி கூறும்பொழுது, பாக்கியம் முற்றிலும் உடைந்து போய் அழுகிறாள். எனக்கு யாரும் வேண்டாம்ப்பா,நீ மட்டும் போதும் என்று புலம்புகிறாள்.நீ இங்கே இருந்தால் உன்னை உயிரோடு விடமாட்டார்கள்.நீ சென்று விடு என்றும், "நீ உசுரோட இருக்கணும்னு தான் நான் நெருப்புல குதிக்கப் போறேன். திரும்பியுமா நீ எனக்கு புள்ளயா பொறக்கப் போற? நாளக்கி உனக்கு ஒரு புள்ளெ பொறந்தா அதை நீ பத்திரமா வச்சிக்க. நாள ஒரு காலத்தில நீயும் எங்களை போல கண்ணுத் தண்ணிய வுட்டுக்கிட்டு,கையக்கட்டிக்கிட்டு நூறு ஆயிரம் பேரு மின்னால நிக்க் கூடாது"7 என்ற சொன்ன பழனிக்கு கண்கள் கலங்கின ஒரு சத்தியம் . நீயும் சாவக்கூடாது , நாங்களும் சாவ மட்டம். இதான் சத்தியம் என்று சொல்லி இரவோடு இரவாக அவரே பாக்கியத்தை அனுப்பி வைக்கிறார் பழனி.

"சாதிமுறை இந்திய சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியாகிவிட்டது. இந்திய சமூகம் சாதி வழி பிளவு பட்டுள்ளது உயர் சாதி கீழ் சாதி ஏற்றத்தாழ்வு முறை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சாதிகளுக்கு இடையேயான இடைவெளி நிரப்பப்படாமையால் சமூக அச்சம் பதற்றமாகி சச்சரவில் முடிகிறது குறிப்பாக கீழ் சாதி பையன் மேல் சாதி பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டால் இரு சாதியினருக்குமிடையேயான சச்சரவு மோதலாக மாறி ஆணவக் கொலையில் முடிகிறது."8 . இந்நாவலில் பழனி அவரின் சமூகத்திற்கு பயந்து பாக்கியத்தை அனுப்பிய விடியற்காலையில் முந்திரி தோட்டத்தில் பால்டாயில் குடித்து பழனி இறந்து கிடக்கிறார்.

**முடிவுரை**

பழனியின் இறப்பு இந்தச் சமூகம் அவருக்கு கொடுத்திருக்கிறது. தனிமனிதனான பழனி இந்நிலைக்கு சமூகமும் சாதியும் காரணமாக அமைகிறது. "சமூக உளவியலானது,இன்றைய உலகம் சந்திக்கும் பலதரப்பட்ட சவால்களுக்கு தீர்வாகிறது"4 . என்று கூறப்படுகிறது. உண்மையில் சமூக உளவியல் சமூகத்தில் நடைபெறும் அனைத்து தீயசெயல்களுக்கான காரணத்தை விளக்கி, அதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை விவரிக்கிறது. அதனை நடைமுறைப்படுத்தினால் சுமூகமான சமூகம் அமையும்.

அடிக்குறிப்புகள்

1. N.Lumna, Social Psychology,P.7
2. N.Lumna, Social Psychology,P.124
3. - டாக்டர் க. வெங்கடேசன் சமூகவியல்,ப.346
4. இமையம் , பெத்தவன் ,பக்10
5. இமையம் , பெத்தவன் , பக் 31
6. இமையம் , பெத்தவன் ,ப.41
7. இமையம் , பெத்தவன் ,ப.43
8. டாக்டர் க. வெங்கடேசன் சமூகவியல்,ப.344

**முதன்மை நூல்**

1.இமையம்(2013) , பெத்தவன், கிரியா பதிப்பகம்-2013

துணைமை நூல்கள்

2. டாக்டர் க. வெங்கடேசன் (2017)சமூகவியல்,வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

3. N.Lumna, Social Psychology, South eastern University of Sri Lanka.